# World Christian Fellowship

www.wcflondon.com
wcflondon@gmail.com

# Romans 09 ரோமர் *09*

## தேவனுடைய சுவிசேஷம் - திரித்துவத்தின் பணி

***ரோமர் 1:1, இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரனும், அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனும், தேவனுடைய சுவிசேஷத்திற்காகப் பிரித்தெடுக்கப்பட்டவனுமாகிய பவுல்.***

*இங்ஙனம் "**தேவனுடைய சுவிசேஷம்**" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.*

*"தேவனிடத்திலிருந்து நற்செய்தி" என்பதே முழு நிருபத்தின் கருப்பொருள்.*

*பவுல் அப்போஸ்தலர் ரோம் நகரத்திற்கு சென்றதில்லை. ஆகையினால் தன்னுடைய அறிமுகத்தில் மூன்று வாக்கியங்களை உபயோகிக்கிறார்.*

1. *பவுல் இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரன்*
2. *அப்போஸ்தலனாய் அழைக்கப்பட்டவன்*
3. *தேவனுடைய சுவிசேஷத்திற்காகப் பிரித்தெடுக்கப்பட்டவன்*

*பவுலின் நிருபத்தை வாசிக்கிறவர்கள் இந்த அறிமுகங்களைப் பார்த்து பவுல் யார் என்பதையும், அவர் எந்த அதிகாரத்தில் இந்த இறையியல் நிருபத்தை எழுதுகிறார் என்பதையும் அறிந்துகொள்ள முடியும்.*

*மேலும் பவுல், தான் இயேசுகிறிஸ்துவினால் அபிஷேகம் பண்ணப்பட்டதாக அறிவிக்கிறார்.*

***அப்போஸ்தலர்** 26:16-18, **இப்பொழுது நீ எழுந்து, காலூன்றிநில். நீ கண்டவைகளையும் நான் உனக்குத் தரிசனமாகிக் காண்பிக்கப்போகிறவைகளையும் குறித்து உன்னை ஊழியக்காரனாகவும் சாட்சியாகவும் ஏற்படுத்துகிறதற்காக உனக்குத் தரிசனமானேன். உன் சுயஜனத்தாரிடத்தினின்றும் அந்நிய ஜனத்தாரிடத்தினின்றும் உன்னை விடுதலையாக்கி, அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக, அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டுத் தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும்பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார்.***

*அக்கிரிப்பா ராஜாவினிடத்தில் பவுல் தன்னுடைய சாட்சியை சொல்லுகிறார். அதில் இயேசுகிறிஸ்து பவுலை அப்போஸ்தலராய் அபிஷேகம் பண்ணியது எவ்வாறு என்று கூறுகிறார்.*

*இயேசு பவுலுக்கு வெளிப்பட்டதுமின்றி, அவர் என்ன செய்யவேண்டும் என்றும் அவருக்கு சொல்லுகிறார்.*

*பவுல் ஏன் தன்னைக் குறித்து இவ்வளவு தெளிவாக அறிமுகப்படுத்த வேண்டியிருந்தது?*

*ஏனென்றால், அந்நாட்களில் பல கள்ள அப்போஸ்தலர்கள் பரவியிருந்தனர்.*

***வெளிப்படுத்தல்** 2:2, **உன் கிரியைகளையும்**, **உன் பிரயாசத்தையும்**, **உன் பொறுமையையும்**, **நீ***

***பொல்லாதவர்களைச் சகிக்கக்கூடாமலிருக்கிறதையும், அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலரென்று சொல்லுகிறதை நீ சோதித்து அவர்களைப் பொய்யரென்று கண்டறிந்ததையும்;***

*பவுல் தன்னை மற்ற அப்போஸ்தலர்களோடு சமமாய் நிறுத்தி, அவர்களுக்கும் தனக்கும் ஒரே அங்கீகாரம் கொடுக்கப்பட்டதாக வலியுறுத்துகிறார்.*

*நம்முடைய 21ம் நூற்றாண்டிலும் தங்களை அப்போஸ்தலர்கள் என்று அழைத்துக்கொள்ளுகிறவர்கள் உண்டு. ஆனால் அவர்கள் அப்போஸ்தலர்கள் அல்ல.*

***எபேசியர்** 2:20, **அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களு மாயிருக்கிறீர்கள்;** **அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்.***

*ஏற்கனவே அஸ்திபாரம் போடப்பட்டாயிற்று. ஆகையினால் இனி எவரும் தங்களை அப்போஸ்தலர்கள் என்று சொல்லிக்கொண்டால், அவர்கள் அஸ்திபாரம் போடவில்லை; மாறாக, அதின் மீது கட்டுகிறார்கள்.*

## தேவனுடைய பார்வையில் தேவனுடைய சுவிசேஷம்

*கடைசிப் பாடத்தை நம்முடைய மாம்ச கண்ணோட்டத்தில் பார்த்தோம்.*

*பவுல் நியாயப்பிரமாணத்தைப் போதிக்கும் ஒரு பரிசேயனாய் இருந்தார்.*

*ஆனால் நியாயப்பிரமாணம் நற்செய்தி அல்ல!*

***கலாத்தியர்** 3:19, **அப்படியானால், நியாயப்பிரமாணத்தின் நோக்கமென்ன**? **வாக்குத்தத்தத்தைப்பெற்ற சந்ததி***

***வருமளவும் <u>அது அக்கரமங்களினிமித்தமாகக் கூட்டப்பட்டு</u>, தேவதூதரைக்கொண்டு மத்தியஸ்தன் கையிலே கட்டளையிடப்பட்டது.***

*நியாயப்பிரமாணம் என்பது இரட்சிப்பை அடையும் யுக்தியோ அல்லது வழியோ அல்ல. நியாயப்பிரமாணம் கிருபைக்கு முக்கியத்துவம் கொடுத்தாலும் அது நற்செய்தியாகாது.*

*நியாயப்பிரமாணம் இஸ்ரவேலர்களுக்கு கொடுக்கப் பட்டதால், அவர்கள் அதின் மூலம் தங்களை இரட்சித்துக் கொள்ளமுடியும் என்று சிலர் நம்புகின்றனர்.*

*அதினால் நற்செய்தியை தேவன் கொடுத்தது இரண்டாம் முயற்சி என்றும் நம்புகிறார்கள். தேவன் கொடுத்த நியாயப்பிரமாணத்தில் மக்கள் தோற்றுப்போயினர். அதினால் தேவன் நற்செய்தியைக் கொடுத்தார் என்று நம்புகிறார்கள். இது நியாயப்பிரமாணம் மற்றும் கிருபை என்னும் இரண்டு கோணங்களிலும் பெரிய தவறு.*

*சுவிசேஷம் என்பது நம் பாவங்களுக்கான மன்னிப்பைப் பெறும் வழி மட்டும்தான் என்று கருதக்கூடாது. பழைய ஏற்பாட்டிலும் பாவ மன்னிப்பைப் பெறுவதற்கான வழிகள் கொடுக்கப்பட்டிருந்தது.*

*சிலர், சுவிசேஷம் என்பது நல்ல ஒழுக்கமான வாழ்க்கை வாழ்வதற்கு மட்டும்தான், அதைத் தவிர்த்து நாம் வேறு ஒன்றும் செய்யவேண்டியதில்லை என்று நம்புகின்றனர். சுவிசேஷம் நம்மில் இருக்கும் பழக்கவழக்கங்களை மாற்றுவதற்கு மட்டுமே என்பது இவர்களின் நம்பிக்கை. கிறிஸ்தவம் என்பது பழக்கவழக்கங்களை சீரமைப்பது அல்ல.*

*ரோமர் **1:16-17**, கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது. விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது.*

*மனிதன் தன்னைத்தானே இரட்சித்துக்கொள்ள எந்த கட்டளையும் கொடுக்கப்படவில்லை. மாறாக, தேவனுடைய வல்லமையே இரட்சிப்பைத் தோற்றுவிக்கிறது.*

*பாவமன்னிப்பு பழைய ஏற்பாட்டிலேயே இருக்கிறது. ஆனால் அத்துடன் புதிதாய் ஒன்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவே தேவ நீதி.*

***தேவனிடத்திலிருந்து நற்செய்தி:***

*இது மனிதனுக்காக தேவன் என்ன செய்திருக்கிறார் என்பதைக் குறித்தது.*

*நான் முன்பு சொன்னதுபோல, நற்செய்தியைக் குறித்த சில வாக்கியங்கள் புதிய ஏற்பாட்டில் இடம்பெற்றுள்ளது.*

- *சமாதானத்தின் சுவிசேஷம்*
- *இராஜ்ஜியத்தின் சுவிசேஷம்*
- *இரட்சிப்பின் சுவிசேஷம்*
- *நித்திய சுவிசேஷம்*

*ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக பவுல் "தேவனுடைய சுவிசேஷம்" என்ற வார்த்தையை அதிகமாய் பயன்படுத்துகிறார்.*

*இதை வெறும் தேவனுடைய சுவிசேஷம் என்று மட்டும் சொல்லாமல், அது அவருடைய குமாரனைக் குறித்தது என்றும், அதை எல்லோரும் கேட்பதற்கு பரிசுத்த ஆவியையும் வேண்டிக்கொள்ளுகிறார்.*

*ரோமர் **1:5**, மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார்.*

*பரிசுத்த ஆவியின் ஏவுதலினால் பவுல் சுவிசேஷத்தின் அழகான இந்த வார்த்தைகளை எழுதுகிறார்.*

*சுவிசேஷம் என்றால் என்ன என்று கிறிஸ்தவர்களைக் கேட்டால், அவர்கள் கீழ்க்கண்டவாறு அதை விவரிப்பர்.*

***பிதா:***

*சுவிசேஷம் என்பது முற்றிலும் பிதாவாகிய தேவனைச் சார்ந்தது என்று சிலர் சொல்லுகின்றனர். இவர்கள் இயேசுகிறிஸ்து என்ற பெயரை மறந்துகூட உபயோகிக்கமாட்டார்கள்.*

*இவர்கள் பிதாவாகிய தேவனைப்பற்றி மட்டுமே பேசுவர்.*

- *தேவனுடைய மன்னிப்பு*
- *தேவனிடத்தில் ஜெபித்தல்*
- *தேவனுடைய வழிநடத்துதல்*

*இந்த பார்வை வியப்புக்குள்ளாக்குகிறது. அவர்கள் தங்கள் இரட்சிப்பிற்கு பிதாவை மட்டும் நம்புகிறார்கள். கிறிஸ்துவின் துணையில்லாமல் தேவனிடத்தில் சேரமுடியும் என்று இவர்கள் நம்புகின்றனர்! இவர்கள் தேவனைக் குறித்த அறிவில் தேறியிருக்கின்றனர் என்று எண்ணிக்கொள்ளுகின்றனர்.*

*நான் புறஜாதிகளைக் குறித்தல்ல, கிறிஸ்தவர்களைக் குறித்தே பேசுகிறேன் என்பதை புரிந்துகொள்ளுங்கள்.*

*கிறிஸ்துவை அனுபவிக்காமல் தேவனிடத்தில் ஒருவர் எப்படி தொடர்புகொள்ள முடியும்?*

**யோவான்** *14:16,* **நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.**

## இயேசுகிறிஸ்து:

*இன்னும் சிலர் எல்லாவற்றிற்கும் இயேசுவை மட்டுமே காரணமாக்குவர். பிதாவாகிய தேவன் மன்னிப்பதற்கு தயங்குவதாகவும், இயேசுகிறிஸ்து எப்போதும் பிதாவிடத்தில் போய் அவரை மன்னிக்கும்படி கெஞ்சி, நமக்கு மன்னிப்பை வாங்கித் தருவதாகவும் இவர்கள் நம்பிக்கொள்ளுகின்றனர். இவர்களின் பாடல்களும் அதே கருத்தை வலியுறுத்துகிறது.*

*நான் அவர்களுக்காக மரித்தேன் என்று இயேசு சொல்லும்போது, நான் அவர்களுடைய வழக்கை தேவனிடத்தில் வைத்து இரட்சிப்பை விண்ணப்பிக்கிறேன் என்று அர்த்தம்.*

***பரிசுத்த ஆவியானவர்:***

*இன்னும் சிலர் பரிசுத்த ஆவியானவரை மட்டுமே மையப்படுத்துகின்றனர். எப்போதும் பரலோகத்திலிருந்து அக்கினியை இறக்கும்படி கேட்பது இவர்களின் வழக்கம். அந்நிய பாஷையை மட்டும்பேசி, பரிசுத்த ஆவியை மட்டும் மகிமைப்படுத்தி, இதெல்லாம் ஆவியானவரால் தான் நடந்தது என்பர்.*

*இவர்களில் பெரும்பாலானவர்கள் எல்லாவற்றையும் பரிசுத்த ஆவியின் மறுபிறப்படைதலோடு தொடர்புபடுத்துவர். கல்வாரியின் பாதையை முற்றிலும் மறந்துவிடுவார்கள்.*

*இயேசுகிறிஸ்துவின் பரிகார பலியில்லாமல் மீட்பு இல்லை.*

*எனவே, திரித்துவத்தின் ஒவ்வொரு நபரையும் தனித்தனியே பிடித்துக்கொள்ளும் மூன்று கூட்ட மக்களைக் குறித்துப் பார்த்தோம். இவர்கள் செய்வது தவறு. ஆனால் ஒவ்வொருவரிடமும் ஒருசில உண்மையான சத்தியங்களுமுண்டு. அது அதைவிட அபாயகரமானது.*

*இரட்சிப்பு என்பது திரித்துவத்தில் செயல்படும் மூன்று நபர்களின் செயல்பாடு.*

*இது பிதாவின் திட்டம்:*

*பிதாவின் பங்களிப்பே முதன்மையானது!*

*திட்டமும் நோக்கமும் அவருடையதே.*

*பிதவாகிய தேவனே இதை முதலில் துவங்கினார், அதைக் குறித்த முதல் வாக்கைக் கொடுத்தவரும் அவரே.*

***ஆதியாகமம் 3:15, உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்.***

*ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தபின், பிதாவாகிய தேவனே இரட்சிப்பைக் குறித்து அவர்களுக்கு வாக்குக் கொடுக்கிறார்.*

***யோவான் 3:16, தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.***

*இது பிதாவாகிய தேவனே!*

*இயேசு பூமியில் இருந்த நாட்களில் இந்த சத்தியத்தை மிகத் தெளிவாய் வலியுறுத்தியுள்ளார்.*

***யோவான் 12:49-50, நான் சுயமாய்ப் பேசவில்லை, நான் பேசவேண்டியது இன்னதென்றும் உபதேசிக்கவேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார். அவருடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறதென்று அறிவேன்; ஆகையால் நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன் என்றார்.***

*நம் ஞாயிறு வேதபாடத்தில் யோவான் சுவிசேஷத்தை முடித்துள்ளோம்.*

***யோவான் 17:4, பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன்.***

*இயேசு பிதாவினால் அனுப்பப்பட்டவர்.*

*பிதா கொடுத்த வேலையை இயேசு செய்யவந்தார்.*

*இயேசுகிறிஸ்து பரிசுத்த ஆவியானவராலே பாதுகாக்கப்பட்டு நடத்தப்பட்டார்.*

*2* ***கொரிந்தியர்*** *5:19,* ***அதென்னவெனில்,*** ***தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல்,*** ***<u>கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி</u>,*** ***ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்.***

*2* ***கொரிந்தியர்*** *5:21,* ***நாம் <u>அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.</u>***

***கலாத்தியர்*** *4:5,* ***காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்.***

*பிதாவாகிய தேவனே மையம், கிறிஸ்துவல்ல.*

*பேதுரு அழகான விளக்கத்தைக் கொடுக்கிறார்.*

*1* ***பேதுரு*** *3:18,* ***ஏனெனில், கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்.***

*நம்மை தேவனிடத்தில் ஒப்புரவாக்குவதே குமாரனுடைய பிரதான வேலை.*

***யோவான்*** *17:3,* ***ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்.***

*இதுவே எப்போதும் சரியான வரிசை.*

- ✓ *எல்லாம் பிதாவிடத்திலிருந்துதான் துவங்குகிறது,*
- ✓ *பிதாவிடத்திலிருந்துதான் வருகிறது,*
- ✓ *பிதாவையே மகிமைப்படுத்துகிறது,*
- ✓ *என்பதை இயேசுகிறிஸ்து அறிந்திருந்தார்.*

*இரட்சிப்பைக் குறித்து நாம் யோசிக்கும்போது, தேவனை மகிமைப்படுத்துதலைக் குறித்து நாம் சிந்திக்கவேண்டும்.*

*ஆம்! தேவன் நம்மை நம்முடைய பாவத்திலிருந்து இரட்சித்தார்; நாம் அவருக்கு நன்றி செலுத்துகிறோம், மகிழ்கிறோம். ஆனால் அத்தோடு நிறுத்திவிடக்கூடாது. தேவனை மகிமைப்படுத்துவதைக் குறித்து யோசிக்கவேண்டும்.*

*நம்முடைய நடக்கையும் பழக்கவழக்கங்களும் நம் இரட்சிப்பின் விளைவே. நம் இரட்சிப்பின் நோக்கம் தேவனை மகிமைப்படுத்துவதே.*

***பாவம் என்றால் என்ன?***

*நாம் தேவனை மகிமைப்படுத்த தவறுவதே பாவம்.*

***ரோமர் 3:23, எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி,***

*மக்கள் தங்கள் இரட்சிப்பின் சாட்சியை பகிரும்போது, அவர்கள்*

*மாற்றமடைந்துவிட்டதாக சொல்லுவது வழக்கம்.*
*மதுபான பழக்கத்திலிருந்தும்,*
*கோபப்படுவதிலிருந்தும்,*
*இன்னும் ஒரு சில காரியங்களை செய்வதிலிருந்தும் தாங்கள் மனந்திரும்பிவிட்டதாக சொல்லுவார்கள்.*

*ஆனால் அது அங்கேயே நின்றுவிடக்கூடாது!*

*தேவனை மகிமைப்படுத்துவதே இரட்சிப்பின் முக்கிய சாராம்சம்.*

*''தேவனை மகிமைப்படுத்துவதும், அவரோடு மகிழ்ந்திருப்பதுமே மனிதனுடைய வாழ்க்கையின் பிரதான எல்லை'' என்று கோட்பாடுகள் சொல்லுகிறது.*

*கோட்பாடுகள் என்பது கிறிஸ்தவ மார்க்கத்தின் கொள்கைகளை வினா-விடை வடிவில் மதப் போதனைகளுக்காக பயன்படுத்துவது.*

*தேவனை மகிமைப்படுத்த தவறுவதே பாவம் என்று விளக்கமளித்தால், ஒழுக்க ரீதியாய் நல்லவனாய் வாழ்பவனும், தான் எந்த அளவிற்கு மோசமான வாழ்க்கை வாழ்ந்துள்ளோம் என்பதை உணர்ந்துகொள்வான்.*

*தேவனை மகிமைப்படுத்தாதது பாவம் என்றால், நம் வாழ்க்கையில் தேவனை மகிமைப்படுத்தும் ஸ்தானத்திற்கு நம்மைக் கொண்டுவருவதே இரட்சிப்பு.*

*பிதாவே தன்னுடைய குமாரனை அனுப்பி அதை செய்யச் சொல்லுகிறார்.*

*குமாரன் மூலமாகவே இரட்சிப்பு சாத்தியமாகிறது.*

*பிதாவாகிய தேவன் தன்னுடைய குமாரனை அனுப்பி, அதைச் செய்யச்சொன்னார். ஆனால் அது அவருடைய குமாரனைக் குறித்த சுவிசேஷம்.*

*இயேசு எல்லாவற்றையும் பரிசுத்த ஆவியின் துணையோடு செய்தார்.*

*ஞானஸ்நானத்திற்கு பின் பரிசுத்த ஆவியானவரின் செயல்பாட்டை நாம் பார்க்கமுடியும்.*

**யோவான்** *3:34,* **தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார்; தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார்.**

*இயேசுகிறிஸ்து தன்னுடைய வேலையைச் செய்வதற்கு பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்திருந்தார்.*

*ஆகையினால், திரித்துவத்தின் மூன்று நபர்களும் இதில் ஈடுபட்டுள்ளனர்.*

*எனவே, இரட்சிப்பு என்பது*

- ✓ *பிதாவாகிய தேவன்*
- ✓ *குமாரனாகிய தேவன்*
- ✓ *பரிசுத்த ஆவியாகிய தேவன்*

*ஆகிய மூவரின் இணைந்த செயல்பாடு.*

*தன் குமாரனை அனுப்பியதின் மூலம் பிதா இப்பணியைத் துவக்கியிருக்கிறார்.*

*குமாரன் பரிசுத்த ஆவியின் வல்லமையினாலே தனக்குக் கொடுக்கப்பட்ட பரிகாரப் பணியை செய்துமுடித்தார்.*

*பரிசுத்த ஆவியானவர் குமாரனை பெலப்படுத்தி வழிநடத்தினார்.*

*திரித்துவ உபதேசம் வேதாகமத்தில் வெளிப்படையாய் குறிப்பிடப்படவில்லை. மறைமுகமாகவே வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்று தேவன் மூன்று நபர்களாய் செயல்படுகின்றனர் என்னும் நேரடி வாக்கியம் இல்லை.*

*வேதாகமம் இதை மிகத் தெளிவாய் குறிப்பிடுகிறது.*

*"தேவனுடைய குமாரனைக் குறித்த சுவிசேஷம்" மற்றும் "பரிசுத்தமுள்ள ஆவியின்படி" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.*

***உதாரணம்:***

***இயேசுவின் ஞானஸ்நானம்.***

*குமாரன் இயேசு யோர்தான் நதியில் நின்றுகொண்டிருக்கிறார்.*

*பரிசுத்த ஆவி புறாவைப்போல அவர் மீது இறங்குகிறார்.*

*பரலோகத்திலிருந்து பிதா, "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" என்கிறார்.*

*திரித்துவத்தின் மூன்று நபர்களின் செயல்பாட்டை ஒரே இடத்தில் காணமுடிகிறது.*

*யோவான் 14இல் இயேசு இந்த வாக்கியத்தைச் சொல்லுகிறார்.*

***யோவான்** 14:18, **நான் உங்களைத் திக்கற்றவர்களாகவிடேன், உங்களிடத்தில் வருவேன்.***

***யோவான்** 14:20-21, **நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள். என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார்.***

*அதே பிதா, குமாரன், பரிசுத்த ஆவியைக் குறித்த சத்தியம்.*

*நம்முடைய தேவன் பிரதானக் கட்டளையை திருச்சபைக்குக் கொடுக்கும்போது, திரித்துவ தேவனுடைய வரிசையில் கொடுத்துள்ளார்.*

***மத்தேயு** 28:19, **ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,***

*பவுல் அப்போஸ்தலர் கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் நிருபத்தை முடிக்கும்போது,*

*2 **கொரிந்தியர்** 13:14, **கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.***

*இங்கே மீண்டும் திரித்துவம் இணைந்து செயல்படுவதை பார்க்கமுடியும்.*

***எபிரேயர்** 9:14, **நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!***

*ஆகையால் பவுல் ரோமருக்கு எழுதின நிருபத்தில் ஏன் அந்த வரிசையை பின்பற்றி எழுதினார் என்பதை நாம் பார்க்கமுடியும்.*

*திரித்துவமே நம் இறையியலின் அடிப்படை என்பதை உங்கள் சிந்தையில் தெளிவாய் பதியவைத்துக்கொள்ளுங்கள்.*

*கர்த்தர்த்துவத்திலுள்ள மூன்று நபர்களுமே சரிசமமானவர்கள், நித்தியமானவர்கள். ஆயினும் மனிதனுடைய இரட்சிப்பின் பணியில் தங்கள் வேலைகளைப் பிரித்துக்கொண்டனர்!*

*திரித்துவத்தின் இன்னொரு பக்கத்தை உங்களுக்குக் காண்பிக்கிறேன்:*

*இயேசுவின் ஊழியம் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் கட்டுப்படுத்தப்பட்டது. இயேசுவை சாத்தானுடையவர் என்று குற்றஞ்சுமத்தும்போது இயேசு இதைச் சொல்லுகிறார். அவரை சாத்தான் என்று குற்றப்படுத்தினார்கள். சாத்தானாகிய பெயல்செபூலின் ஸ்தானாதிபதி என்று குற்றப்படுத்தினர்.*

***மத்தேயு** 12:31-32, **ஆதலால், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: எந்தப் பாவமும் எந்த தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப்படும்; ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை. எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்; எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை.***

***இயேசு என்ன சொன்னார்**?*

*இயேசு அவர்களை நோக்கி, நீங்கள் மாம்சத்திலிருக்கும் என்னைக் குற்றப்படுத்தலாம், அது உங்களுக்கு மன்னிக்கப்படும். ஆனால் என்னில் கிரியை செய்யும் பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதிருங்கள். அது உங்களுக்கு மன்னிக்கப்படாது என்றார்.*

*இயேசுவின் கிரியைகளை அவர்கள் மறுதலித்தபோது, நீங்கள் மனுஷ குமாரனை தூஷிக்கவில்லை, மாறாக, பரிசுத்த ஆவியானவரை தூஷிக்கிறீர்கள் என்கிறார்.*

***ஏன்?***

*அவர் பரிசுத்த ஆவியானவரின் வல்லமைக்கு தன்னை முழுமையாய் ஒப்புக்கொடுத்திருந்ததினால், இயேசுவின் செய்கை தூஷிக்கப்பட்டபோது, அவர்கள் பரிசுத்த ஆவியை தூஷித்தார்கள். ஏனெனில், பரிசுத்த ஆவியானவர் அவர் மூலமாய் கிரியை செய்துகொண்டிருந்தார்.*

*பவுல் தன்னுடைய அறிமுகத்தில் இயேசுவின் மனுஷீகத்தையும் தெய்வீகத்தையும் சொல்லுவதோடு மட்டுமல்லாது, பரிசுத்த ஆவியானவரோடு அவருக்கு இருந்த உறவையும் முக்கியத்துவப்படுத்துகிறார். இது இறையியல் வகையறாவில் மிகவும் வியக்கத்தக்க ஒன்று.*

## ***முடிவுரை:***

*பழைய ஏற்பாட்டைப் படித்து, வரப்போகிற இந்த சுவிசேஷத்தைக் குறித்த தீர்க்கதரிசனங்களை கண்ணோக்கினால், அது ஒரு பாடலைப் போல் இருக்கிறது.*

***ஏசாயா 35:1-10, வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளி களித்து, புஷ்பத்தைப்போலச் செழிக்கும். அது மிகுதியாய்ச் செழித்துப் பூரித்து ஆனந்தக்களிப்புடன் பாடும்; லீபனோனின் மகிமையும், கர்மேல்சாரோன் என்பவைகளின் அலங்காரமும் அதற்கு அளிக்கப்படும்; அவர்கள் கர்த்தருடைய மகிமையையும், நமது தேவனுடைய மகத்துவத்தையும் காண்பார்கள். தளர்ந்த கைகளைத் திடப்படுத்தி, தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்துங்கள். மனம் பதறுகிறவர்களைப் பார்த்து: நீங்கள் பயப்படாதிருங்கள்,***

***திடன்கொள்ளுங்கள்; இதோ, உங்கள் தேவன் நீதியைச் சரிக்கட்டவும், உங்கள் தேவன் பதிலளிக்கவும் வருவார்; அவர் வந்து உங்களை இரட்சிப்பார் என்று சொல்லுங்கள். அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம். அப்பொழுது முடவன் மானைப்போல் குதிப்பான்; ஊமையன் நாவும் கெம்பீரிக்கும்; வனாந்தரத்திலே தண்ணீர்களும், கடுவெளியிலே ஆறுகளும் பாய்ந்தோடும். வெட்டாந்தரை தண்ணீர்த்தடாகமும், வறண்ட நிலம் நீரூற்றுகளுமாகும்; வலுசர்ப்பங்கள் தாபரித்துக் கிடந்த இடங்களிலே புல்லும் கொறுக்கையும் நாணலும் உண்டாகும். அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும்; அது பரிசுத்த வழி என்னப்படும்; தீட்டுள்ளவன் அதிலே நடந்துவருவதில்லை; அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப் போவதில்லை. அங்கே சிங்கம் இருப்பதில்லை; துஷ்டமிருகம் அங்கே போவதுமில்லை, அங்கே காணப்படவுமாட்டாது; மீட்கப்பட்டவர்களே அதில் நடப்பார்கள். கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக்களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேலிருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்.***

***ஏசாயா** 55ஐ நேரமெடுத்து வாசியுங்கள்.*

*லூக்கா சுவிசேஷத்தில் தேவதூதன் மேய்ப்பர்களுக்கு காட்சியளித்தபோது,*

***லூக்கா** 2:10, **தேவதூதன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்.***

*மேயப்பர்கள் குழந்தையைப் பார்த்து சந்தோஷமடைந்தனர்.*

**லூக்கா *2:20,* மேய்ப்பர்களும் தங்களுக்குச் சொல்லப்பட்டதின்படியே கேட்டு கண்ட எல்லாவற்றிற்காகவும் தேவனை மகிமைப்படுத்தி, துதித்துக்கொண்டு திரும்பிப் போனார்கள்.**

*தேவதூதர்கள் பாடினார்கள்.*

**லூக்கா *2:14, "*உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக"**

**சுவிசேஷம் உங்கள் இருதயத்திற்கு மகிழ்ச்சியை கொண்டுவந்ததா?**

**சுவிசேஷம் தான் நீங்கள் கேள்விப்பட்டதிலேயே மிகவும் சந்தோஷமான நன்மை என்று உங்களால் உண்மையாய் சொல்லமுடியுமா?**

*இது உங்களுடைய வாழ்க்கையில் நீங்கள் கேள்விப்பட்ட மிகவும் சிறந்த நற்செய்தி, அல்லது அப்படியில்லாமல் இருக்கலாம்!*

*நீங்கள் சந்தோஷப்படாததற்கு, கீழ்க்கண்டவற்றுள் ஏதேனும் ஒரு காரணம் இருக்கக்கூடும்:*

- *பாவத்தைக் குறித்து போதிய அறிவில்லாதிருப்பது*
- *தன் பாவத்தை போதிய அளவு உணராதிருப்பது*
- *நல்ல வாழ்க்கை வாழுகிறோம் என்று நீங்கள் நினைத்துக்கொண்டிருக்கலாம்.*
- *நீங்கள் சந்தோஷம் இல்லாதிருக்கிறீர்கள் என்றால், அதற்கான காரணத்தை தேவனிடத்தில் கேட்டு, மனந்திரும்பி, நற்செய்தியை சந்தோஷத்தோடு பெற்றுக்கொள்ளுங்கள்.*

பாவத்தின் பின் விளைவை அறியாததும் இன்னுமொரு காரணம். நவீனகால தத்துவங்கள் தேவனுடைய அன்பைக் குறித்தே போதிக்கிறது. நரக ஆக்கினையை மறுதலிக்கிறது.

தேவனுடைய சுவிசேஷம் உங்கள் இருதயத்தையும் சிந்தையையும் ஆட்கொள்ளட்டும்; தேவனை மகிமைப்படுத்தும் வாழ்க்கை வாழப் பழகுவோம்.